**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்**

**வலங்கைமான்**

முன்னிலை : திருமதி. ச. சிந்தா, B.A., B.L(HONS).,

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான். (மு.கூ.பொ.)

2023 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 03-ம் நாள் வியாழக்கிழமை

**ஆண்டு பட்டிகை வழக்கு எண். 14/2023**

**குற்ற எண். 591/2022**

CNR No. TNTV09-000120 - 2023

அரசுக்காக,

காவல் உதவி ஆய்வாளர்,

வலங்கைமான் காவல் நிலையம்,

திருவாரூர். ... குற்றமுறையீட்டாளர்.

// எதிர்//

1) முருகேஷ்,

வயது 23/2023,

த/பெ. லெட்சுமணன்,

லயம் மெயின் ரோடு,

விருப்பாச்சிப்புரம்,

வலங்கைமான்(TK).

2) அஜீத்குமார்,

வயது 25/2023,

த/பெ. ராமமூர்த்தி,

கீழத்தெரு, ஆதிச்சமங்கலம்,

வலங்கைமான் (TK). .... எதிரிகள்.

**2019 ம் ஆண்டு குற்றவியல் நடைமுறை விதிகள், விதி 106 ன் கீழ் படியான விபரங்கள்**

| | | |
|---|---|---|
| வரிசை எண் | | ஆண்டுபட்டிகை வழக்கு எண். 14/2023 |
| காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்றஎண் | | வலங்கைமான் காவல் நிலையம், திருவாரூர் குற்ற எண்.592/2022 |
| குற்றம் சாட்டப்பட்டவரின் விவரம் | பெயர் | A1 – முகேஷ் த/பெ. லெட்சுமணன்,<br>A2 - அஜித்குமார். த/பெ, ராமமூரத்தி |
| | தொழில் | A1 மற்றும் A2 - |
| | குடியிருப்பு | A1 - லயம் மெயின் ரோடு,<br>விருப்பாச்சிப்புரம்,<br>வலங்கைமான்(TK).<br>A2- கீழத்தெரு, ஆதிச்சமங்கலம்,<br>வலங்கைமான் (TK). |
| | வயது | A1 - 23/2023<br>A2 - 25/2023 |
| தேதி / நாள் | சம்பவம் | 25-11-2022 |
| | முறையீடு | 2611-2022 |
| | கைது | A1 மற்றும் A2 - 26-11-2022 |
| | பிணையில் விடுவித்தல் | A1 மற்றும் A2 – 16-12-2022 |
| | ஒப்படைத்தல் / அனுப்பிவைத்தல் | பொருந்தாது |
| | விசாரணை துவக்கம் | 26-04-2023 |

| | | |
|---|---|---|
| | விசாரணை முடிவு | 20-07-2023 |
| | தண்டனை உத்தரவு | 03-08-2023 |
| | தீர்ப்புரை நகலை வழங்குதல் / குற்றம் சாட்டப்பட்டவர் மீதான காண் முடிவு | CIS – ல் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. |
| காலதாமதத்தின் விளக்கம் | | காலதாமதம் எதுவும் இல்லை. |

இவ்வழக்கானது கடந்த 01.03.2023-ம் தேதியன்று இந்நீதிமன்றத்தில் ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.14/2023-ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இன்று 03.08.2023-ம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசுத்தரப்பில் கற்றறிந்த அரசு குற்றவியல் உதவி வழக்கறிஞர் நிலை-1 திருமதி. கே. கனிமொழி அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. எம். முரளி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களையும் கேட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் கவனமான பரிசீலனையில் இருந்து வந்ததுமான இவ்வழக்கில் இன்று 03.08.2023 ம் தேதி இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## தீர்ப்புரை

### 1. அரசுத்தரப்பு வழக்கு:

அரசுத்தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்றயிறுதி அறிக்கையில் இருந்து தெரியவரும் அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு. கடந்த 24.11.2022 ம் தேதி

இவ்வழக்கு எதிரிகள் இருவரும் வலங்கைமான் காவல் சரகம் பாடகச்சேரியில் இவ்வழக்கின் வாதி சிவபாதசேகரன் ஏஜென்சி என்ற பெயரில் கட்டி வரும் பெட்ரோல் பங்க் வளாகத்தில் இருந்த ஊதா நிறம் உள்ள மின் மோட்டாரை தங்களின் சுய லாபத்திற்காகவும், வாதிக்கு இழப்பு ஏற்படுத்தும் விதத்தில் திருடி சென்று, குற்றச்செயல் புரிந்துள்ளார்கள் என்பது அரசுத்தரப்பு வழக்காகும். இவ்வழக்கு எதிரிகள் மீது இதச பிரிவு 379 ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட விவரம்</u>**:

குவிமுச பிரிவு 173(2)ன் கீழ் இவ்வழக்கின் குற்றயிறுதி அறிக்கை திருவாரூர் வலங்கைமான் காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளரால் கடந்த 27.02.2023-ம் தேதியன்று இந்திய தண்டனைச்சட்டம் 1860 பிரிவு 379 ன் கீழ் இவ்வழக்கின் எதிரிகளின் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி குற்றயிறுதி அறிக்கையானது கடந்த 01.03.2023 ம் தேதி நீதிமன்றக்கோப்பிற்கு எடுக்கப்பட்டு குவிமுச பிரிவு 204-ன் கீழ் எதிரிகளுக்கு சம்மன் அனுப்பட்டது.

3. **<u>எதிரிகளுக்கு குவிமுச பிரிவு 207 ன் கீழ் நகல் வழங்கப்பட்டத்தின் விவரம்</u>** :

எதிரிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலை ஆனவுடன் அரசுத்தரப்பு ஆவணங்களின் நகல்கள் அவருக்கு குவிமுச பிரிவு 207-ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

4. **<u>எதிரிகளின் மீது வனைப்பட்ட குற்றச்சாட்டுகளின் விவரம்</u>**:

4. 1. எதிரிகளுக்கு போதுமான கால அவகாசம் கொடுக்கப்பட்டு, இருதரப்பு

வாதங்களையும் கேட்டு, வழக்காவணங்களை பரிசீலனை செய்து, இந்நீதிமன்றத்தால் 1 மற்றும் 2 எதிரிகளின் மீது குவிமுச பிரிவு 240(1)ன் படி 1 மற்றும் 2 எதிரிகளின் மீது இந்திய தண்டனைச்சட்டம் 1860 பிரிவு 379 ன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது.

4. 2. மேற்படி குற்றச்சாட்டுகளை எதிரிகளிடம் விளக்கி வினவியபோது எதிரிகள் அவர்கள் மீதான குற்றச்சாட்டுகளை மறுத்துரைத்தனர். எனவே அரசுத்தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டு அவர்களுக்கு அழைப்பாணை அனுப்பட்டது.

5. **அரசுத்தரப்பு சாட்சியம்:**

அரசுதரப்பில் அ.சா.1 முதல் அ.சா.8 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கின் தடயப்பொருளான மின்மோட்டார் அரசுத்தரப்பில் சா. பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6. **அரசுத்தரப்பு சாட்சியங்களின் மூலம் தெரியவரும் அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்:**

6. 1. அ.சா.1 தனது நீதிமன்ற சாட்சியத்தில், அவர் தற்போது உடையார் கீழ அக்ரஹார தெருவில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருவதாகவும், பாடகச்சேரியில் சிவபாதகசேகரன் ஏஜென்சியில் புதிதாக பெட்ரோல் பங்க் ஆரம்பிக்க வேலை நடந்து வருவதாகவும், கடந்த 24.01.2022 ம் தேதி மேற்படி இடத்தில் வேலை முடிந்தவுடன்

கட்டுமான பொருட்களை அங்கு உள்ள தகர செட்டில் எடுத்து வைத்துவிட்டு வந்ததாகவும், அந்த செட்டுக்கு அருகில் ரூ.15,000/- மதிப்புள்ள டர்மொ நீர் மோட்டார் இருந்ததாகவும், மறுநாள் 25.11.2022 ம் தேதி காலை அங்கு வேலைக்கு சென்ற ஆட்கள் போன் செய்து டர்மொ மோட்டாரை காணவில்லை என்று தன்னிடம் கூறியதாகவும், அவர் காலை 10.00 மணிக்கு அங்கு சென்று பார்த்தபோது மோட்டாரை காணவில்லை என்றும், அங்கு பொருத்தப்பட்டிருந்த சிசி டிவி கேமராவின் பதிவுகளை பார்த்தபோது இரண்டு நபர்கள் அந்த மோட்டாரை அந்த இடத்தில் திருடி ஒரு ஸ்பென்டர் பிளஸ் இருசக்கரவாகனத்தில் எடுத்து சென்றது பதிவாகி இருந்ததாகவும், திருட்டு சம்பந்தமாக கடந்த 26.11.2022 ம் தேதி வலங்கைமான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும், 26.11.2022 ம் தேதி திருடு போன பொருள் கிடைத்துவிட்டதாக போலிசார் தனக்கு போனில் தகவல் தெரிவித்ததாகவும், தான் உடனே காவல் நிலையம் சென்று திருடு போன பொருளை அடையாளம் காட்டியதாகவும், எதிரிகளிடம் தன்னுடைய மோட்டாரை திருடியவர்கள் என்று சிசிடிவி கேமரா பதிவுகளை பார்த்ததை வைத்து போலிசாரிடம் அடையாளம் காட்டியதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். புகார் அ.சா.ஆ.1 ஆகவும், மின் மோட்டார் சா.பொ.1 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது..

6. 2. அ.சா.2 தனது நீதிமன்ற சாட்சியத்தில், கடந்த 24.11.2022 ம் தேதி அ.சா.1 க்கு சொந்தமான பாடகச்சேரியில் உள்ள பெட்ரோல் பங்கில் கொத்தனார் வேலை செய்து வந்ததாகவும், அன்றைய தினம் வேலையை முடித்து கட்டுமான பொருட்களை

அருகில் உள்ள கொட்டகையில் வைத்து பூட்டி விட்டு கொட்டகைக்கு அருகில் இருந்த தண்ணீர் எடுக்கும் மோட்டாரை சாக்கு போட்டு மூடிவிட்டு வந்ததாகவும், மறுநாள் மோட்டாரை காணவில்லை என்றும், அ.சா.1 அங்கு பொருத்தப்பட்டிருந்த சிசிடிவி பதிவுகளை பார்த்தபோது, இரண்டு நபர்கள் மேற்படி மோட்டாரை அந்த இடத்தில் இருந்து திருடி சென்றது தெரிந்தது என்றும், இது சம்பந்தமாக அ.சா.1 வலங்கைமான் காவல் நிலையத்தில் கடந்த 26.11.2022 ம் தேதி புகார் கொடுத்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

6. 3. அ.சா.3 தனது நீதிமன்ற சாட்சியத்தில் அவர் தற்போது புலியக்குடியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருவதாகவும், அ.சா.1 யை தனக்கு தெரியும் என்றும், பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் தன்னுடையது தான் என்றும், அந்த கையொப்பத்தை சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்பு பாடகச்சேரி பெட்ரோல் பங்கில் தான் வேலை பார்த்தபோது அங்குள்ள மோட்டார் காணாமல் போனது சம்பந்தமாக போலிசார் விசாரணை செய்து எழுதிக்கொண்டார்கள் என்றும், அதில் தானும், அன்புரோசும் சாட்சிகளாக கையொப்பம் செய்ததாகவும், போலிசார் தன்னை விசாரணை செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆக அ.சா.3 ன் மூலமாக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6. 4. அ.சா.4 தனது நீதிமன்ற சாட்சியத்தில், புலியக்குடியில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருவதாகவும், அ.சா.1 யை தனக்கு தெரியும் என்றும், பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் தன்னுடையது தான் என்றும், அந்த

கையொப்பத்தை சுமார் ஒரு வருடத்திற்கு முன்பு பாடகச்சேரி பெட்ரோல் பங்கில் தான் வேலை பார்த்தபோது அங்குள்ள மோட்டார் காணாமல் போனது சம்மந்தமாக போலிசார் விசாரணை செய்து எழுதிக்கொண்டார்கள் என்றும், அதில் தானும், ஜேம்சும் சாட்சிகளாக கையொப்பம் செய்ததாகவும், போலிசார் தன்னை விசாரணை செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

6. 5. அ.சா.5 தனது நீதிமன்ற சாட்சியத்தில், அவர் கொட்டையூரில் குடியிருந்து கிராமிய கலைஞராக வேலை செய்து வருவதாகவும், இவ்வழக்கு எதிரிகளை தனக்கு தெரியாது என்றும், தன்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், அந்த கையொப்பத்தை வலங்கைமான் காவல் நிலைய தலைமை காவலர் தன்னிடம் கேட்டுக்கொண்டதற்கு இணங்க போட்டதாகவும், ஏன் எதற்காக போட்டேன் என்ற விவரம் தனக்கு தெரியாது என்றும், போலிசார் தன்னை விசாரணை செய்ததாகவும், ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் அ.சா.ஆ.3 மற்றும் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டது. அ.சா.5 அரசுத்தரப்பால் பிறழ் சாட்சியாகக் கருதி குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

6. 6. அ.சா.6 தனது நீதிமன்ற சாட்சியத்தில், அவர் உடையாலுரில் குடியிருந்து கொத்தனாராக வேலை செய்து வருவதாகவும், அ.சா.1க்கு சொந்தமான வெற்றாட்டு பாலம் அருகில் பெட்ரோல் பங்கில் வேலை பார்த்து வருவதாகவும், இன்றிலிருந்து சுமார் 5 மாதங்களுக்கு முன்பு அங்கிருந்த தண்ணீர் இரைக்கும் மோட்டாரை

காணவில்லை என்றும், அது சம்மந்தமாக அ.சா.1 கொடுத்த புகாரின் அடிப்படையில் வலங்கைமான் போலிசார் தன்னை விசாரணை செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

6. 7. அ.சா.7 தனது நீதிமன்ற சாட்சியத்தில், அவர் தற்போது கொட்டையூரில் குடியிருந்து மேஸ்திரியாக வேலை செய்து வருவதாகவும், இவ்வழக்கின் எதிரிகளை தனக்கு தெரியாது என்றும், தன்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றம் கைப்பற்றுதல் மகசரில்உள்ள இரண்டாவது கையொப்பம் தன்னுடையது தான் என்றும், அந்த கையொப்பத்தை வலங்கைமான் போலிசார் தன்னிடம் கேட்டுக்கொண்டதற்கு இணங்க போட்டதாகவும், ஒப்புதல் வாக்குமூலத்திலும், கைப்பற்றுதல் மகசரிலும் என்ன விவரங்கள் எழுதி இருந்தது என்று தனக்கு தெரியாது என்றும், இவ்வழக்கு சம்மந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும், போலிசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்றும், சாட்சியம் அளித்துள்ளார். ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் அ.சாஆ.5 மற்றும் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.சா.7 அரசுத்தரப்பால் பிறழ்சாட்சியாகக் கருதி குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

6. 8 . அ.சா.8 தனது நீதிமன்ற சாட்சியத்தில், அவர் தற்போது வலங்கைமான் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வருவதாகவும், கடந்த 26.11.2022 ம் தேதி வலங்கைமான் காவல் நிலையத்தில் பணியில் இருந்தபோது பாபுதாஸ் மகன் ஜெயந்தன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரைப் பெற்று நிலைய குற்ற

எண்.591/2022, இதச பிரிவு 379 ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, சம்பவ இடம் சென்று சம்பவயிட சாட்சிகள் ஜேம்ஸ் மற்றும் அன்புரோஸ் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும், பின்னர் இவ்வழக்கின் பட்டியல் சாட்சிகளை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், சாட்சிகளின் விசாரணையிலிருந்து சம்பவம் உண்மையென தெரிய வந்ததால் எதிரிகளை தேடிவந்த நிலையில் கடந்த 26.11.2022 ம் தேதி வலங்கைமான் சுற்று வட்டார பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தபோது லாயம் பஸ்ஸாடப் அருகே சந்தேகப்படும் படியாக நின்றுக்கொண்டிருந்த இவ்வழக்கு எதிரிகளை விசாரணை செய்து அப்போது 1வது எதிரி தானாக முன் வந்து ஒப்புதல் வாக்குமூலத்தை அங்கிருந்த சாட்சிகள் கலியபெருமாள், முருகேசன் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்து 1வது எதிரி எடுத்து ஆஜர் செய்த, மின் மோட்டாரை கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைப்பற்றியதாகவும, பின்னர் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றதாகவும், பின்னர் எதிரிகளை கைது செய்து உரிய நடைமுறைக்கு பின்பு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியதாகவும், இவ்வழக்கு தடயத்தை படிவம் 95 ன் மூலமாக நீதிமன்றத்தில் ஒப்படைத்ததாகவும், இத்துடன் புலன் விசாரணையை முடித்து கடந்த 17.12.2022 ம் தேதி எதிரிகள் மீது இதச பிரிவு 379 ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆகவும், மாதிரி வரைபடம்

அ.சா.ஆ.8 ஆகவும், கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.9 ஆகவும், படிவம் 95 அ.சா.ஆ.10 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

7. **<u>குவிமுச பிரிவு 313(1) (b) ன் படியான விசாரணை</u>:**

இவ்வழக்கில் அரசுத்தரப்பால் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து எதிரிகளுக்கு பாதகமாக உள்ள சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகள் குறித்து குவிமுச பிரிவு 313(1) (b)ன் கீழ் எதிரிகளுக்கு விளக்கி வினவிய போது எதிரிகள் மேற்படி சாட்சிகளின் சாட்சியம் பொய் என்று மறுத்துரைத்தார். மேலும், எதிரிகள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் எதுவும் இல்லை என்று தெரிவித்தார்கள்.

8. **<u>எதிரிகள் தரப்பு வழக்கு</u> :**

எதிரிகளின் மீது பொய்யாக வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது என்றும் எதிரிகள் குற்றத்தை செய்தார்கள் என்று நிருப்பிக்க சாட்சியம் எதுவும் இல்லை என்பது எதிரிகள் தரப்பு வாதமாகும். எதிரிகள் தரப்பில் சாட்சிகள் எதுவும் விசாரிக்கப்படவில்லை ஆவணங்கள் மற்றும் சான்றுபொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

9. **<u>தீர்வுக்குறிய பிரச்சினை</u> :**

i) எதிரிகள் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டினை அரசுத்தரப்பு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிருப்பித்துள்ளதா?

ii) அவ்வாறு குற்றம் நிருப்பிக்கப்பட்டிருப்பின் எதிரிகளுக்கு கிடைக்கக்கூடிய

தண்டனையின் விபரம் என்ன?

என்பதே இவ்வழக்கின் தீர்வு குரிய பிரச்சினையாகும்.

10. **<u>தீர்வு :</u>**

10. 1. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டு வழக்காவணங்கள் பரிசீலணை செய்யப்பட்டது. அரசுத்தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.8 வரையிலான சாட்சியகளின் சாட்சியம் மற்றும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்களின் மூலம் அரசுத்தரப்பு வழக்கு சந்தேகத்திற்கு இடமின்றி நிருபிக்கப்பட்டுள்ளதாகவும், ஆகையால் 1 மற்றும் 2 எதிரிகளை குற்றவாளிகள் என தீர்மானித்து தக்க தண்டனை வழங்குமாறு வாதிடப்பட்டது. எதிரிகள் தரப்பில் அரசுத்தரப்பு வழக்கு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிருபிக்கப்படவில்லை என்றும், 1 மற்றும் 2 எதிரிகளை குற்றச் சம்பவத்தோடு தொடர்பு படுத்தும் விதத்தில் எவ்வித சாட்சியமும் இல்லை என்றும், இவ்வழக்கு எதிரிகள் நீதிமன்றத்தில் தான் முதன் முறையாக புகார்தார் அ.சா.1 ஆல் அடையாளம் காட்டப்பட்டுள்ளார் என்றும், புலன் விசாரணை அதிகாரியால் அடையாள அணிவகுப்பு நடத்தப்படவில்லை என்றும், மாதிரி வரைபடத்தில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டிருந்த இடத்தை குறிப்பிடப்படவில்லை என்றும், புகார்தாரான அ.சா.1 எதிரிகளின் பெயரை குறிப்பிட்டு கூறவில்லை என்றும் வாதிடப்பட்டது. எனவே, 1 மற்றும் 2 எதிரிகளை குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்து தீர்ப்பு வழங்குமாறு வாதிடப்பட்டது.

10. 2. 1872ம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 101ன் கீழ் எதிரிகள் மீது

சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டினை மெய்ப்பிக்கும் சுமை அரசுத்தரப்பைச் சார்ந்தது. அரசுத்தரப்பால் மேற்படி 1 மற்றும் 2 எதிரிகள் மீதான குற்றச்சாட்டினை மெய்ப்பிக்கும் பொருட்டுஅ.சா.1 முதல் அ.சா. 8 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.10 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. அரசுத்தரப்பு வழக்கு யாதெனில், கடந்த 24.11.2022 ம் தேதி இவ்வழக்கு எதிரிகள் இருவரும் வலங்கைமான் காவல் சரகம் பாடகச்சேரியில் இவ்வழக்கின் வாதி சிவபாதசேகரன் ஏஜென்சி என்ற பெயரில் கட்டி வரும் பெட்ரோல் பங்க் வளாகத்தில் இருந்த ஊதா நிறம் உள்ள மின் மோட்டாரை தங்களின் சுயலாபத்திற்காகவும், வாதிக்கு இழப்பு ஏற்படுத்தும் விதத்தில் திருடி சென்று குற்ற செயல் புரிந்துள்ளார்கள் என்பது அரசுத்தரப்பு வழக்காகும். இவ்வழக்கு எதிரிகள் மீது இதச பிரிவு 379 ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

10. 3. அ.சா.1 இவ்வழக்கின் நிகழ்வுநிலை புகார்தாரர் ஆவார். அ.சா.1 அவரது சாட்சியத்தில் பாடகச்சேரியில் சிவபாதகசேகரன் ஏஜென்சியில் புதிதாக பெட்ரோல் பங்க் ஆரம்பிக்க வேலைகள் நடந்து வருவதாகவும், கடந்த 24.11.2022 ம் தேதி மேற்படி இடத்தில் வேலையை முடித்து கட்டுமான பொருட்களை அங்குள்ள தகர செட்டில் எடுத்து வைத்துவிட்டு வந்ததாகவும், தகர செட்டுக்கு அருகில் ரூ.15000 மதிப்புள்ள டர்மோ நீர் மோட்டார் இருந்ததாகவும், அதனை காணவில்லை என்று கடந்த 25.11.2022 ம் தேதி வேலைக்கு சென்ற ஆட்கள் தனக்கு போன் செய்து சொன்னதன் அடிப்படையில் அவர் அன்றைய தினம் காலை 7.00 மணிக்கு அங்கு சென்று

பார்த்தபோது மோட்டார் காணாமல் போனது தெரியவந்ததாகவும், அங்கு பொருத்தப்பட்டிருந்த சிசி டிவி கேமராவை பார்த்தபோது இரண்டு நபர்கள் அதனை திருடி எடுத்து சென்றது தெரியவந்ததாகவும், இது சம்பந்தமாக வலங்கைமான் காவல் நிலையத்தில் 26.11.2022 ம் தேதி புகார் கொடுத்ததாகவும், அன்றைய தினமே போலிசார் தனக்கு போன்செய்து திருடு போன பொருள் கிடைத்துவிட்டதாகவும், அடையாளம் காட்டும்படி போனில் தகவல் தெரிவித்ததாகவும், தான் காவல் நிலையம் சென்று திருடு போன பொருள் தன்னுடையது தான் என்று அடையாளம் காட்டியதாகவும், சிசிடிவி கேமராவின் பதிவுகளை பார்த்ததை வைத்து இவ்வழக்கின் எதிரிகள் தான் மோட்டாரை திருடியவர்கள் என்று போலிசாரிடம் அடையாளம் காட்டியதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். இவ்வழக்கின் குற்றச்சம்பவமானது கடந்த 25.11.2022 ம் தேதி நடந்ததாக கூறப்பட்டுள்ள நிலையில் புகாரானது ஒரு நாள் காலதாமாக 26.11.2022 ம் தேதி கொடுக்கப்பட்டுள்ளது. மேற்படி காலதாமதத்திற்கான விளக்கத்தை அ.சா.1 தனது குறுக்கு விசாரணையில் சிசிடிவி கேமரா பதிவுகளுடன் புகாரை தரும்படி போலிசார் கூறியதால் ஏற்பட்ட காலதாமதம் என்று கூறியுள்ளார். எனினும் இந்த வழக்கில் சிசி டிவி கேமரா பதிவுகள் அரசுத்தரப்பில் ஆவணமாகவோ, சான்று பொருளாகவோ தாக்கல் செய்யப்பட்டு குறியீடு செய்யப்படவில்லை. ஆகையால் அ.சா.1 கூறியுள்ள காலதாமதத்திற்கான விளக்கம் நம்ப தகுந்ததாக இல்லை. இவ்வழக்கில் குற்றச்சம்பவத்தை நேரடியாக பார்த்த சாட்சிகள் யாரும் இல்லை. இவ்வழக்கானது சூழ்நிலை சாட்சியத்தை (Circumstantial Evidence) அடிப்படையாக கொண்ட

வழக்காகும். மாண்புமிகு உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றத்தின் முன் தீர்ப்பு படி சூழ்நிலை சாட்சியத்தில் அடிப்படையாக கொண்ட வழக்குகளில் சூழ்நிலைகள் அனைத்தும் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசுத்தரப்பால் நிரூபணம் செய்யப்பட்டிருந்தால் மட்டுமே எதிரி குற்றச்சம்பவத்தை புரிந்ததாக தீர்மானித்து கூறமுடியும். அ.சா.1 அவரது குறுக்கு விசாரணையில் இவ்வழக்கின் எதிரிகளை சம்பவத்திற்கு முன்னரே தெரியும் என்றும், எதிரி முகேஷின் மாமா அவரது ஏஜென்சியில் வேலை பார்த்து வருவதாக அவர் மூலமாக ஏஜென்சியில் திருடு போவதற்கு 3 நாட்களுக்கு முன்பு வேலை கேட்க வந்ததாகக் கூறியுள்ளார். அ.சா.1 க்கு இவ்வழக்கின் எதிரிகளின் பெயர் விவரம் முன்னரே தெரிந்துள்ள நிலையில் அவரது புகார் மனுவில் எதிரிகளின் பெயர் குறிப்பிடாமல் யாரோ மர்ம நபர்கள் மோட்டாரை திருடி சென்றதாகக் கூறியுள்ளது அரசுதரப்பு வழக்கின் மீது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

10. 4. அ.சா.2 அ.சா.1 க்கு சொந்தமான பெட்ரோல் பங்கில் கொத்தனார் வேலை செய்து வருவதாகவும், கடந்த 24.11.2022 ம் தேதி வேலையை முடித்துவிட்டு கட்டுமான பொருட்களை அங்கு உள்ள கொட்டகையில் பூட்டிவிட்டு வந்ததாகவும், கொட்டகைக்கு அருகில் மோட்டாரை சாக்கு போட்டு மூடிவைத்ததாகவும், மறுநாள் வேலைக்கு செல்லும்போது மோட்டாரை காணவில்லை என்றும், அங்கு

பொருத்தப்பட்டிருந்த சிசி டிவி பதிவுகளை பார்த்தபோது இரண்டு நபர்கள் மோட்டாரை திருடி சென்றது தெரியவந்ததாகவும், அ.சா.1 சம்பவம் குறித்து வலங்கைமான் காவல் நிலையத்தில் 26.11.2022 ம் தேதி புகார் கொடுத்ததாகவும், கூறியுள்ளார். அ.சா.1 மற்றும் அ.சா.2 ன் நீதிமன்ற சாட்சியம் மூலமாக அ.சா.1 க்கு சொந்தமான பெட்ரோல் பங்கில் உள்ள நீர் மோட்டார் கடந்த 24.11.2022 ம் தேதி காணாமல் போனது தெரியவருகிறது. மேலும், அவர்களின் சாட்சியம் மூலமாக இரண்டு நபர்கள் நீர் மோட்டாரை அந்த இடத்தில் இருந்து திருடி சென்றது அங்கு உள்ள சிசி டிவி கேமராவில் பதிவாகி உள்ளதாக தெரியவருகிறது. எனினும், இவ்வழக்கு எதிரிகள் தான் அ.சா.1 க்கு சொந்தமான பெட்ரோல் பங்கில் இருந்த நீர் மோட்டாரை திருடினார்களா என்பதே இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சினையாகும். இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 114 ன் கீழ் திருட்டு சம்பவத்தை தொடர்ந்து எவர் ஒருவர் திருடு போன பொருளை தனது உடைமையில் வைத்துள்ளரோ, அவரிடம் இருப்பதற்கான காரணத்தை சரியாக விளக்கிக் கூற இயலாத பட்சத்தில் அவர் தான் அந்த பொருளை திருடியதாக நீதிமன்றத்தால் எதிரிடை அனுமானம் செய்துக்கொள்ள முடியும். இவ்வழக்கில் திருடு போன தடயப்பொருளான டர்மொ நீர் மோட்டார் இவ்வழக்கு எதிரிகளிடம் இருந்து தான் கைப்பற்றப்பட்டதா, என்பதே பரிசீலிக்கையில் இவ்வழக்கின் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும், கைப்பற்றுதல் மகசர் சாட்சிகளான அ.சா.5 மற்றும் அ.சா.7 இருவருமே பிறழ் சாட்சியாக மாறியுள்ளனர். இருவரும் அவர்களது நீதிமன்ற

சாட்சியத்தில் வலங்கைமான் காவல் நிலையத்திற்கு அவர்களின் சொந்த வேலையாக சென்றிருந்தபோது போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் கையொப்பம் செய்ததாகவும், இவ்வழக்கின் எதிரிகளை தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளனர். ஆகவே இவ்வழக்கின் திருடு போன தடயப்பொருளான நீர் மோட்டார் எதிரிகள் வசம் இருந்ததாகவும், அதனை ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டது என்பது அரசுத்தரப்பால் நிருபணம் செய்யப்படவில்லை. இவ்வழக்கின் மற்ற சாட்சிகளான பார்வை மகசர் சாட்சிகளான அ.சா.3 மற்றும் அ.சா.4 மற்றும் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.8 அரசுத்தரப்பு வழக்கிற்கு சாதகமாக சாட்சியம் அளித்து இருந்தாலும், இவ்வழக்கு எதிரிகள் தான் திருட்டு சம்பவத்தில் ஈடுபட்டார்கள் என்பதற்கும், அவர்களிடமிருந்து தான் இவ்வழக்கின் திருடு போன தடயப்பொருள் கைப்பற்றது என்பதற்கும் போதுமான ஆதாரங்கள் இல்லாததால் பார்வை மகசர் சாட்சிகளின் சாட்சியம் மற்றும் புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தை மட்டும் வைத்து இவ்வழக்கின் எதிரிகள் குற்றச்சம்பவம் புரிந்துள்ளதாகக் கருத இயலாது.

10. 5. மேற்கூறிய காரணங்களினால் இவ்வழக்கின் 1 மற்றும் 2 எதிரிகள் மீது இந்நீதிமன்றத்தால் வனையப்பட்ட குற்றச்சாட்டை அரசுத்தரப்பு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே,

சந்தேகத்தின் பலனை இவ்வழக்கின் எதிரிகளுக்கு வழங்கி அரசுத்தரப்பு வழக்கு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசுத்தரப்பால் நிரூபணம் செய்யப்படவில்லை என இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

11. **முடிவு:**

முடிவாக, சந்தேகத்தின் பலனை இவ்வழக்கின் எதிரிகளுக்கு வழங்கி, 1 மற்றும் 2 எதிரிகளுக்கு எதிரான அரசுத்தரப்பு வழக்கு அரசுத்தரப்பால் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிருபணம் செய்யப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

1 மற்றும் 2 எதிரிகள் இந்திய தண்டனைச்சட்டம் 1860 பிரிவு 379 ன் கீழ் குற்றவாளி இல்லை என்று தீர்மானித்து 1 மற்றும் 2 எதிரிகளை குவிமுச பிரிவு 248(1) ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. 1 மற்றும் 2 எதிரிகள் இவ்வழக்கில் இருந்து விடுதலை செய்து உத்தரவிடப்படுகிறது.

எதிரிகளின் பிணைப்பத்திரம் மேல்முறையீட்டுக் காலத்திற்கு பின்னர் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது. வழக்கு சொத்தான ஊதா கலர் மின் மோட்டார் மேல் முறையீட்டு காலத்திற்கு பின்னர் உரிமையாளர் வசம் ஒப்படைக்க குவிமுச பிரிவு 452 ன் கீழ் உத்தரவிடப்படுகிறது.

1 மற்றும் 2 எதிரிகள் குவிமுச பிரிவு 437A ன் கீழ் மேல் முறையீட்டு நீதிமன்றத்தின் உத்தரவுக்கு இணங்க ஆஜராகும்படி பிணைப்பத்திரம் நிறைவேற்றம் செய்ய உத்தரவிடப்படுகிறது. மேற்படி பிணையப்பத்திரமானது 6 மாதக்காலம் வரை நிலுவையில் இருக்கும்.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் படித்துப்பார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று, 2023-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 03-ஆம் தேதி வியாழக்கிழமை இந்நீதிமன்றத்தில் அவையறியப்பகரப்பட்டது.

S CINTHA

Digitally signed by S CINTHA
DN: cn=S CINTHA, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2023.08.03 14:55:47 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், வலங்கைமான்.(FAC)

## Case Summary

| S.No | Particulars | Details |
|---|---|---|
| 1. | Period of remand of the accused | A1 and A2 - 26.11.2022 to 16-12-2022 |
| 2. | Date of filing of final report/complaint in the Court | 27-02-2023 |
| 3. | Date of committal | Not applicable |
| 4. | Date of questioning of the accused under section 240 CrPC | 26.04.2023 |
| 5. | Details of miscellaneous petitions | Not applicable |
| 6. | Date of examination-in chief and cross-examination of witness | PW1- 30.06.2023(Chief & Cross)<br>PW2- 30.06.2023(Chief & Cross)<br>PW3- 30.06.2023(Chief & Cross)<br>PW4- 30.06.2023(Chief & Cross)<br>PW5- 30.06.2023 (Chief & Cross)<br>PW6- 13.07.2023(Chief & Cross)<br>PW7- 13.07.2023(Chief & Cross)<br>PW8- 13.07.2023(Chief & Cross) |
| 7. | Date of examination of accused under section 313 CrPC | 20.07.2023 |
| 8. | Details of abscondence of accused | Not applicable |
| 9. | Grant of stay by superior courts | Not applicable |
| 10. | Details of victim compensation ordered | Not ordered |

## இணைப்பு

## சாட்சிகளின் விபரம்

**அரசுதரப்பு சாட்சிகள்**

| தரவரிசை | பெயர் | வகை |
|---|---|---|
| அ.சா.1 | ஜெயந்தன் | புகார்தாரர் |
| அ.சா.2 | பிரபு | செவிவழி சாட்சி |
| அ.சா.3 | ஜேம்ஸ் | மகசர் சாட்சி |
| அ.சா.4 | அன்பு ரோஸ் | மகசர் சாட்சி |
| அ.சா.5 | கலியபெருமாள் | ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சி |
| அ.சா.6 | செல்வமணி | செவிவழி சாட்சி |
| அ.சா.7 | முருகேசன் | ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சி |
| அ.சா.8 | ராஜேஸ்குமார் | புலன் விசாரணை அதிகாரி |

**எதிரிகள் தரப்பு சாட்சி** - இல்லை

**நீதிமன்ற சாட்சி** - இல்லை

## சான்றாவணங்களின் விபரம்

**அரசுதரப்பு சான்றாவணங்கள்**

| வரிசை எண். | சான்றாவண எண். | விபரம் |
|---|---|---|
| 1. | அ.சா.ஆ.1/அ.சா.1 | புகார் |

| | | |
|---|---|---|
| 2. | அ.சா.ஆ. 2/அ.சா.3 | பார்வை மகசர் |
| 3. | அ.சா.ஆ. 3/அ.சா.5 | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையொப்பம் |
| 4. | அ.சா.ஆ. 4/ அ.சா.5 | கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் |
| 5. | அ.சா.ஆ. 5/அ.சா.7 | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் |
| 6. | அ.சா.ஆ. 6/அ.சா.7 | கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் |
| 7. | அ.சா.ஆ. 7/அ.சா.8 | முதல் தகவல் அறிக்கை |
| 8. | அ.சா.ஆ. 8/அ.சா.8 | மாதிரி வரைபடம் |
| 9. | அ.சா.ஆ. 9/அ.சா.8 | கைப்பற்றுதல் மகசர் |
| 10. | அ.சா.ஆ. 10/அ.சா.8 | படிவம் 95 |

**எதிரிகள் தரப்பு சான்றாவணம்** -இல்லை

**நீதிமன்ற சான்றாவணம்** - இல்லை

**சான்று பொருள் -**

| **வரிசை எண்.** | **சான்றாவண எண்.** | **விபரம்** |
|---|---|---|
| 1. | சா.பொ. 1/அ.சா. 1 | ஊதா கலர் மின் மோட்டார் |

S CINTHA

Digitally signed by S CINTHA
DN: cn=S CINTHA, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2023.08.03 14:56:44 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்

நடுவர், வலங்கைமான். (FAC)

**<u>தீர்ப்புரையின் நகல்</u>** :

1. மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், திருவாரூர் அவர்களுக்கு பணிந்து சமர்பிக்கப்படுகிறது.
2. கற்றறிந்த அரசு குற்றவியல் வழக்கறிஞர் நிலை -1,
   மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வலங்கைமான்.

**<u>குறிப்பு</u>** :

1. இவ்வழக்கின் முடிவு சம்பந்தப்பட்ட காவல் துறைக்கு தெரிவிக்கப்பட்டது.
2. இவ்வழக்கின் எதிரிகள் நீதிமன்ற விசாரணையின் போது பிணையில் இருந்தனர்.
3. சாட்சிகள் 3 வாய்தாவிற்கு மேல் அழைக்கப்படவில்லை.